# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 210/2015**

பெயர்: **முருகன்** நாள்: 02.12.2023

வா.சா.3 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.3 – முருகன் - சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.08</u>

நான் சாட்சியம் அழைக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அசல் வழக்கை அருள்குமார் என்பவர் கோவில் இடம் வேண்டுமென்று அவருடைய சித்தப்பா மகன்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால், கோவிலுக்கு செல்லும் பாதையை தடுத்துவிட்டார்கள், அதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளார். கோவில் சர்வே எண் 384/5ல் உள்ளது, சர்வே எண் 384/6 காலி இடமாகும். சர்வே எண் 384/6 சம்பந்தப்பட்ட வருவாய் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால், இல்லை. சர்வே எண் 384/6 ஆனது வருவாய் ஆவணங்களின்படி குட்டியம்மாள் பெயரில் உள்ளது என்று சொன்னால், தவறுதலாக பெயர் மாற்றம் செய்துள்ளார்கள். சர்வே எண் 384/6 ஆனது குட்டியம்மாள் பெயரில்தான் 60, 70 வருடங்களாக உள்ளது என்றாலும், நான் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

2) கோவில் இடத்தில் கோவில் பிரகாரத்தை சுற்றி வருவதற்காக இடம் உள்ளது. வழக்கு சம்பந்தப்பட்ட கோவில் ஆதியில் அருணாசலம், அர்த்தனாரி கவுண்டர், தாத்துகவுண்டர் ஆகியோர்களால் கட்டப்பட்டது என்றால், சரிதான். இதில் அருணாசலம் என்பவர் குட்டியம்மாளின் கணவர் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. குட்டியம்மாளின் கணவர் பெயர் என்னவென்று எனக்கு தெரியாது. மேற்படி மூன்று நபர்களுக்கும் கோவில் சம பங்கு உள்ளது என்றால், சரிதான். மேற்படி மூன்று நபர்களும் தற்போது உயிருடன் இல்லை. வழக்கு

கோவிலில் அருணாசலம் வாரிசுகளுக்கும் ஒரு பங்கு உள்ளது என்று சொன்னால், குட்டியம்மாளுக்கு பாத்தியம் உள்ளது. கோவிலுக்கு வரி செலுத்தும் பணத்தை வட்டிக்கு விடுவது வழக்கம் என்றால், சரிதான். 1 ம் பிரதிவாதி மகேஸ்வரி என்பவர் ரூ.57900/-த்தை கடனாக வாங்கியிருந்தார், அதை கோவிலுக்கு திருவிழா நடக்கும்போது திருப்பி கொடுத்துவிட்டார். கோவிலுக்கு சம்பந்தமில்லாத, வரி செலுத்தப்படாத நபர்களுக்கு கோவில் பணத்திலிருந்து கடன் எதுவும் கொடுக்கமாட்டார்கள். முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள விபரங்களை வாதி கூறினார். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பமிட்டேன். வாதி அருள்குமார் வழக்கு சம்பந்தப்பட்ட கோவிலுக்கு தர்மகர்த்தா அல்ல என்று சொன்னால், சரியல்ல. அவர்தான் தர்மகர்த்தா ஆவார்.

3) சர்வே எண் 384/6 ல் உள்ள நிலத்தில் குட்டியம்மாள்தான் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால், சரியல்ல. நான் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள அனைத்து விபரங்களும் வாதிக்காக பொய்யாக கூறியுள்ள விபரங்கள் என்று சொன்னால், சரியல்ல. சாமி ஊர்வலம் சர்வே எண் 384/6 ன் வழியாக ஒருபோதும் செல்லவில்லை என்று சொன்னால், சரியல்ல. எப்போதும் சாமி முன்பாகத்தான் செல்லும். கோவிலுக்கு முன்பாக நந்தியும், நந்திக்கு கிழக்குபுறம் காலியிடமும் உள்ளது. அதன் வழியாகத்தான் சாமி செல்கிறது. நந்தி சிலைக்கு ஒட்டினாற்போல் தென்வடலாக பாதை உள்ளது. வழக்கு கோவிலில் 1 ம் பிரதிவாதிக்கும் உரிமை உள்ளது என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு கோவிலுக்கு 3 ல் 1 பங்கு வரி செலுத்தி வந்தார்கள் என்று சொன்னால், அவருடைய தகப்பனார் இருந்தவரை வரி செலுத்தினார்கள். அவருடைய தகப்பனாரின் இறப்பிற்கு பின்பும் 1 ம் பிரதிவாதி வரி செலுத்தி வருகிறார் என்று சொன்னால், சரியல்ல. கோவிலில் கணக்கு வழக்கு சம்பந்தமாக ஒரு புத்தகம் பராமரிக்கப்பட்டு வருகிறது, அதில் வரி செலுத்துபவர்களின் விபரங்கள் மற்றும் கடன் பெற்றவர்களின் விபரங்கள் குறிக்கப்படும்.

4) 11.08.2015 ம் தேதியில் பிரதிவாதிகள் எந்த தொந்தரவு செய்யவில்லை என்றாலும், வாதிதான் குட்டியம்மாளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில்

அத்துமீறி நுழைந்து தொந்தரவு கொடுத்தார் என்று சொன்னால், சரியல்ல. 11.08.2015ம் தேதியில் 1ம் பிரதிவாதி வேலி அமைத்தார். அந்த வேலியை சட்டவிரோதமாக அகற்றியதால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால், சரியல்ல. நான் வாதிக்கு நெருங்கிய நண்பர் என்பதால், அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11.30

ஒப்பம்/முருகன்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.